

நாகையில் நடைபெற்ற மூன்றாவது புத்தகத் திருவிழாவை சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் .எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ. மதிவாணன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ் நாகை நகர்மன்றத் தலைவர் இரா. மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்தவர், சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த திருமதி.மாரிக்கண்ணு என்பவரின் வாரிசுதாரரிடம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் 16.08.2024 அன்று அவர்களது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கினார்.

### பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.4.98 கோடி மதிப்பில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஆக. 20 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். ஏழை எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக தருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பொது மக்கள் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் இன்று ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல பகுதிகளில் பல்வேறு மக்கள்நலத்திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்ச்சியில், முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் இலந்தங்குழி ஊராட்சியில் கீழ் ரூ.90.30 லட்சம் மதிப்பீட்டில் இலந்தங்குழி முதல் ஆலத்தூர் அரியலூர் சாலை இணைப்பு வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், கொட்டரை ஊராட்சியில் ரூ.173.54 லட்சம் மதிப்பீட்டில் பிலிமிசை முதல் கொட்டரை வரை தார் சாலை அமைக்கும் பணியையும், திம்மூர் ஊராட்சியில் கீழ் ரூ.96.40 லட்சம் மதிப்பீட்டில் திம்மூர் முதல் கண்ணனூர் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும்,

மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் ஆதனூர் ஊராட்சியில் ரூ.11.50 லட்சம் மதிப்பீட்டில் ஆதனூர் செல்லமுத்து ஏரி முதல் மேல்நிலை நீர் தேக்க தொட்டி வரை பம்பிங் மெயின்லைன் அமைத்தல் மற்றும் மோட்டார் உடன் கூடிய புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியினையும், கூடலூர் ஊராட்சிக்குட்பட்ட அருணகிரி சந்திப்பு சாலையில் ரூ.18.10 லட்சம் மதிப்பீட்டில் 7.5 எச்.பி மோட்டார் உடன் கூடிய புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் மாரியம்மன் கோயில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், கொளக்காநத்தம் ஊராட்சியில் ரூ.89.75 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டும் பணியினையும், காரை ஊராட்சியில் ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் காரை முதல் மலையப்பன் நகர் வரை உள்ள தார் சாலை மேம்படுத்தும் பணியினையும் என மொத்தம் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் 07 புதிய பணிகளுக்கு இன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், கொளக்காநத்தம், கூத்தூர் மற்றும் காரை அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அரசின் இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், ஆலத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை பாஸ்கர், ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சேகர், பிரேமலதா, ஆலத்தூர் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அண்ணா கிராம ஒன்றியம் –

# கோழிப்பாக்கம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

## வி.கே.வெங்கட்ராமன் தலைமையில், டாக்டர் விஷ்ணு பிரசாத் எம்.பி.துவக்கி வைத்தார்!

கடலூர், ஆக. 20 -

கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதி அண்ணா கிராமம் ஒன்றியம் கோழிப்பாக்கம், பகண்டை, மாளிகைமேடு, கீழ் கவரப்பட்டு, மேல் கவரப்பட்டு, கொங்கராயனூர், பி.என். பாளையம் ஆகிய ஊராட்சி பகுதியில்

பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து ஊரகப் பகுதிகளில் உள்ள பொது மக்களின் குறைகளை மனுக்களாக பெற்று ஆன்லைன் மூலம் உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் கோரிக்கை மனுக்கள் பெரும் முகாம் கோழிப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்தது.

முகாமிற்கு அண்ணா கிராம ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஆத்மா குழு தலைவர் வி. கே வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். பண்ருட்டி வட்டாட்சியர் ஆனந்த், அண்ணா கிராமம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், முருகன் முன்னிலை வகித்தனர்.

கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம். கே .விஷ்ணு பிரசாத் ,அவர்கள் முகாமினை துவக்கி வைத்து நலத்திட்டங்களை வழங்கினார்.

இம் முகாமில் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மின்சாரத்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு இணையதள கணினி மூலம் பொதுமக்களின் மனுக்களை ஆன்லைனில் பதிவு செய்து தீர்வு காணப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் பட்டாம்பாக்கம் ஜெயமூர்த்தி, தொரப்பாடி சுந்தரவடிவேல், மாவட்ட பிரதிநிதி ராமச்சந்திரன், அவைத் தலைவர் முத்து சங்கர் , மாவட்ட பிரதிநிதிகள் ராமு ராமச்சந்திரன், புருஷோத்தமன் ,ராஜசேகர் ,துணை செயலாளர்கள் ராமர் ,உமையாள் ஆறுமுகம் , பொருளாளர் ஜி.கே. ஸ்ரீதர் ,

மாவட்ட அணி நிர்வாகிகள் கலியுல் ரகுமான், நரிமேடு செந்தில், ஏசுதாஸ், எழில்செல்வன், தகவல் தொழில் நுட்ப அணி ஞானவேல், செயலாளர்கள் கருணா மூர்த்தி, தாமோதரன், சிவனேசன் ,அழகேசன், தினகர் ஒன்றிய கவுன்சிலர் குமரகுரு, அங்கீர் கனி, முருகன், தொரப்பாடி நகரதுணை செயலாளர் குணாளன், பி-என்.பாளையம் மாளிகை மேடு பகண்டை மேல் கவர் பட்டு கீழ் கவரப்பட்டு கோழிப்பாக்கம் ஊராட்சியில் உள்ள கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் தென் புதுப்பட்டு ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை அமைச்சர் செஞ்சிமஸ்தான் திறந்து வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகனேசன்,ஊராட்சி மன்ற தலைவர் சிவக்குமார் உள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி மண்டல அளவிலான போட்டிக்கு 18 பேர் தேர்வு!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி . - எஸ்.எம்.மதுரா செந்தில் சான்றிதழ் வழங்கினர்!

நாமக்கல், ஆக. 20 -

நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி நடைபெற்றது. இதில் மண்டல அளவிலான போட்டிக்கு 18 பேர் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி, எஸ்.எம்.மதுரா செந்தில் சான்றிதழ் வழங்கினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 100 இளம் பேச்சாளர்களை தலைமைக்கு தேர்வு செய்து தருமாறு கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார் அதன்படி "என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி" அறிவிக்கப்பட்டு அதற்கு தமிழ்நாடு முழுவதும் 17,000 அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர்

அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகர மண்டல திட்டக் குழு உறுப்பினருமான எஸ்.எம். மதுரா செந்தில், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஏற்பாட்டில் பேச்சுப்போட்டி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது. இது போட்டியில் நாமக்கல் மாவட்டத்திலிருந்து 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர். பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தலா ரூ.1000 வழங்கப்பட்டது. மேலும் பேச்சு போட்டியில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மஞ்சு மற்றும் பிரபாகரன் உட்பட 18 பேர்களுக்கு நாமக்கல் நாமக்கல் கிழக்கு மாவட்ட சார்பில் தலா ரூ.10,000 மற்றும் மண்டல அளவில் நடைபெறும் பேச்சு போட்டியில் பங்கு பெற வாய்ப்பளிக்கப்பட்டது.

போட்டியின் நடுவர்களாக வே.மதிமாறன், சிவ. ஜெயக்குமார் சௌமியன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, டான் அசோக், மில்டன், சுகுணா திவாகர், மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபீசுல்லா அருள் எழிலன், மாநில இளைஞரணி துணை செயலாளரும், மேலிட பார்வையாளருமான பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று பேச்சுப்போட்டியின் தலைப்புகளாக என்றென்றும் பெரியார், ஏன்?, அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை, சுயமரியாதைக்காரர் கலைஞர்,

**கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி,**

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதிக் காவலர் கலைஞர், தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க., பேசி வென்ற இயக்கம், திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் என்ற தலைப்புகளில் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் எஸ்.பூபதி, நாமக்கல் நகர தி.மு.க. செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய திமுக செயலாளர்கள் வி.கே.பழனிவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத், மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். பாலாஜி, துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், ரமேஷ், கலைவாணன், பிரபாகரன், டி.சுந்தர், நவலடி ராஜா, ஜெகதீசன், கதிரவன், முரளி, கார்த்தி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 100 இளம் பேச்சாளர்களை தலைமைக்கு தேர்வு செய்து தருமாறு கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியதின் பேரில் "என் உயிரினும் மேலான" என்ற தலைப்பில் நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஏற்பாட்டில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் மண்டல அளவிலான பேச்சுப்போட்டிக்கு அதிக மதிப்பெண்கள் பெற்ற மஞ்சு மற்றும் பிரபாகரன் உட்பட 18 பேர்களுக்கு தலா ரூ.10,000 மற்றும் சான்றிதழ்களை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, து.கலாநிதி, எஸ்.பூபதி, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார் மற்றும் நடுவர்கள் ஒன்றிய, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார், பழனிவேல், சண்முகம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இரகுமான்கான்

### ஆகஸ்ட் 20 (2020)



**மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.**

**மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.**

**கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் 'அண்ணா விருதினை' முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.